# திருநெல்வேலி மாநகராட்சி

**2019ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ம் நாள் புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**1)** திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2018–19–ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்குட்பட்ட வார்டு எண் 6 கைலாசபுரம் நடுத் தெரு, கைலாசபுரம் கீழத் தெரு, கணேசபுரம், வார்டு எண்.5 சாலை தெரு, வார்டு எண் 3 க்குட்பட்ட சிவன் தெற்கு தெரு மற்றும் சிவசக்தி ரோடு ஆகிய பகுதிகளில் சீர்மிகு சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கான பணிக்கு ரூ.1456.00 லட்சத்திற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 14595/2018/IHSDP-3, நாள் 13.02.2019–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க.எண் 25477/2017/DO-1, நாள் 14.06..2019–ன்படி தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டதின்படியும் மேற்படி திட்டப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 14/சீர்மிகு நகரம்/2018–19/SCM–ன்படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் மக்கள் குரல் தமிழ் நாளிதழின் அனைத்துப்பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 11.07..2019 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 16.08.2019 –ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் திரு.ஆர்.எஸ்.ராஜகோபால் மற்றும் (2)திரு.எஸ்.கணேசன் ஆகிய இரு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 22.08.2019 –ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் திரு.எஸ்.கணேசன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு.ஆர்.எஸ்.ராஜகோபால் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னாரது விலைப்புள்ளி அட்டவணை மட்டும் 26.08.2019–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:–

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | திரு.ஆர்.எஸ். ராஜகோபால் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) 2018–19–ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் வார்டு எண்.6 கைலாசபுரம் நடுத் தெரு, கைலாசபுரம் கீழத் தெரு, கணேசபுரம், வார்டு எண்.5 சாலை தெரு, வார்டு எண் 3 க்குட்பட்ட சிவன் தெற்கு தெரு மற்றும் சிவசக்தி ரோடு ஆகிய பகுதிகளில் சீர்மிகு சாலைகள் அமைத்தல் | ரூ.14,00,55,720/- | ரூ.14,84,59,040/- 6.00% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு, மேற்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு.ஆர்.எஸ்.ராஜகோபால் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.14,84,59,040/– ஆனது மதிப்பீட்டை விட 6.00% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல எனக் கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 30.08..2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 03.09..2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து

விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட **6.00%** அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட **4.95%** அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு திரு.ஆர்.எஸ்.ராஜகோபால் என்பவரின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.**14,69,88,479/-** ஆனது மதிப்பீட்டை விட **4.95%** அதிகமாக உள்ளதால் இது ஏற்கத் தக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க **10.09..2019** அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது **19.09.2019**-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான கட்டிடப் பொருட்கள், எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, **19.09.2019**-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.ஆர்.எஸ்.ராஜகோபால் என்பவரின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.**14,69,88,479/-** மதிப்பீட்டை விட **4.95%** கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) **2018-19**-ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் வார்டு எண்.**6** கைலாசபுரம் நடுத் தெரு, கைலாசபுரம் கீழத் தெரு, கணேசபுரம், வார்டு எண் **5**, சாலை தெரு, வார்டு எண் **3** க்குட்பட்ட சிவன் தெற்கு தெரு மற்றும் சிவசக்தி ரோடு ஆகிய பகுதிகளில் சீர்மிகு சாலைகள் அமைக்கும் பணியானது அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-**1**, அத்தியாயம் **2**, உட்பிரிவு **2.7.2**-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட **5%** வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், **19.09.2019**ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.ஆர்.எஸ்.ராஜகோபால் என்பவரின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.**14,69,88,479/-** மதிப்பீட்டை விட **4.95%** கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பீட்டுத் தொகை ரூ.**1456.00** லட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் **2018-2019**-ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் **68**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ஒ.பு.அ.எண். **14**/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/**2018-19/SCM**)

---

**2)** திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் **2018-19**-ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சி வார்டு எண்.**41** நெல்லையப்பர் கோவிலை சுற்றியுள்ள தெருக்களை அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்வதற்கான திட்டப் பணிக்கு ரூ.**1485.00** லட்சத்திற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர்

அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 14595/2018/ IHSDP-3, நாள் 19.02.2019—ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க.எண் 25477/2017/DO—1, நாள்:06.08..2019—ன்படி தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டதின்படியும் மேற்படி திட்டப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 15/சீர்மிகு நகரம்/ 2018—19/SCM—ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினமலர் தமிழ் நாளிதழின் அனைத்துப் பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 15.08..2019 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 19.09..2019 —ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் மெசர்ஸ்.கே.பி.எம். கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பெனி, திருப்பூர் மற்றும் (2) மெசர்ஸ்.சக்தி கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஈரோடு ஆகிய இரு ஒப்பந்தக்காரார்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 19.09.2019 —ம் தேதியன்று ஒப்நதப்புள்ளிகள் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மெசர்ஸ்.சக்தி கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான மெசர்ஸ்.கே.பி.எம். கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பெனி, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னாரது விலைப்புள்ளி அட்டவணை மட்டும் 25.09.2019—ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:—.

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | மெசர்ஸ்.கே.பி.எம். கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பெனி, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) 2018—19 —ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சி வார்டு எண் 41 நெல்லையப்பர் கோவிலை சுற்றியுள்ள தெருக்களை அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.14,33,27,431/- | ரூ.15,33,14,671/- 6.97% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு, மேற்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான மெசர்ஸ்.கே.பி.எம். கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பெனி, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,33,14,671/— ஆனது மதிப்பீட்டை விட 6.97% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல எனக் கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 25.09..2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 27.09.2019—ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 6.97% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மெசர்ஸ்.கே.பி.எம். கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பெனி, திருப்பூர் நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.15,04,22,139/— ஆனது மதிப்பீட்டை விட 4.95% அதிகமாக உள்ளதால் இது ஏற்கத்தக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 27.09.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 30.09.2019 —ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான கட்டிடப் பொருட்கள், எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை

சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 30.09.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.கே.பி.எம்.கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பெனி, திருப்பூர் நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின்வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.15,04,22,139/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) 2018–19–ன் கீழ், திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி மாநகராட்சி வார்டு எண்.41 நெல்லையப்பர் கோவிலை சுற்றியுள்ள தெருக்களை அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்வது அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு–1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2–ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 30.09.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.கே.பி.எம்.கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பெனி, திருப்பூர் நிறுவனத்தின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.15,04,22,139/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1485.00 லட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2018–2019–ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 69

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ஒ.பு.அ.எண் 15/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம்/2018–19/ SCM)

---

3) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளில் முன்வைப்புத் தொகை ஒப்பந்தத்தாரரால் செலுத்தப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.எஸ்.கண்ணன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | முன்வைப்புத் தொகை (ரூ) | தச்சை மண்டல காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 5, சந்திப்பு பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணிகள் | 21000 | 2017–18/II/P.No.12 |

அலுவலகக் குறிப்பு

மேற்காணும் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(ii)–ன்படி முன்வைப்புத் தொகை ரூ.21,000/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.கண்ணன் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 70

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளுக்கான பட்டியல் தொகையில் 5% RM தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 5% RM தொகையினை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்தத்தாரர் M/s Cooper Corporation நிறுவனத்தினரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | Amount 5% RM (Rs.) | Register Details |
|---|---|---|---|
| 1 | S/d of installation and commissioner of 50 KAV silent diesel GenSet @ Maharaja Nagar | 63,486 | Main Office- Lapsed 2014-15 P.No.20 |
| 2 | S/d of installation of 62 KVA diesel GenSet @ Theepatchiamman Koil HW | 70,829 | |
| | Total | 1,34,315 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள 5% RM தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/–க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)–ன்படி மேற்படி 5% RM ரூ.1,34,315/– மட்டும் ஒப்பந்தத்தாரர் M/s Cooper Corporation நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 71

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

5) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் அருகில் உள்ள நேருஜி சிறுவர் கலையரங்கம் முன்பிருந்து வண்ணார்பேட்டை புறவழிச்சாலையை இணைக்கும் அங்கீகரிக்கப்பட்ட "வண்ணார்பேட்டை விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 1 "–ல் கண்டுள்ளவாறு உத்தேச 60' "DD" திட்டசாலையானது D.D.P/(TVIR)No.39/93–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாநகரத்தின் மிக முக்கிய இணைப்பு சாலையாக உள்ளது. திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்குள் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப தற்போது உள்ள சாலைகள் போதுமானதாக இல்லை. எனவே திருவனந்தபுரம் சாலைக்கு இணையாக பாளையங்கோட்டை வார்டு அலுவலகம் எதிர்புறம் உள்ள சாலையானது (பாளையங்கோட்டையிலிருந்து புறவழிச்சாலை வழியாக) வெளியூர்களுக்கு போக்குவரத்து நெருக்கடி இல்லாமல் செல்ல மிகவும் வசதியாக இருக்கும் எனவும், திருவனந்தபுரம் பிரதான சாலைக்கு மாற்றுச்சாலையாக அமைவதாலும், மேற்படி சாலையினை அமைத்து தருமாறு பாளையங்கோட்டை பகுதி பொது மக்கள் நலசங்கங்கள் மற்றும் வாகன ஓட்டிகள் மாநகராட்சியில் கோரிக்கை செய்து வருகின்றனர்.

எனவே வண்ணார்பேட்டை விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 1 மற்றும் வண்ணார்பேட்டை விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 2 திட்ட வரைபடத்தின்படியும் மற்றும் அரசிதழில் பிரகடனம் செய்யப்பட்ட அட்டவணையின்படியும் 60' அடி உத்தேச திட்டச்சாலையானது "வண்ணார்பேட்டை பைபாஸ் ரோடு D.D Plan No:2"–வில் 60' (18m) அகல "D.D" திட்டச்சாலை எனவும், "வண்ணார்பேட்டை பாளையங்கோட்டை ஹைரோடு D.D.plan No:2"–வில் 60' (18 m) அகல "B1B1" திட்டச்சாலை எனவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு திட்டங்களும் அனுமதி வழங்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்த நிலையில் உள்ளதால், திட்ட சாலையினை அமைக்க ஏதுவாக மேற்கண்ட இரண்டு திட்டங்களையும் "மறு ஆய்வு இணக்கம் (Review Consent) செய்து திருநெல்வேலி மாநகராட்சிக்கு வழங்க தெரிவித்து, உறுப்பினர் செயலர் (பொ), உள்ளூர் திட்டக்குழுமம், திருநெல்வேலி அவர்களை கேட்டுக்கொள்ளலாம். மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக்குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி, "வண்ணார்பேட்டை விரிவு அபிவிருத்தி திட்டம் எண் 1"–ல் அமைந்துள்ள திட்ட வரைபடத்தின்படியும் மற்றும் அரசிதழில் பிரகடனம் செய்யப்பட்ட அட்டவணையின்படியும் 60' அடி உத்தேச திட்டச்சாலையானது "வண்ணார்பேட்டை பைபாஸ் ரோடு D.D Plan No:2"–வில் 60' (18 m) அகல "D.D" திட்டச்சாலை எனவும், "வண்ணார்பேட்டை பாளையங்கோட்டை ஹைரோடு D.D.plan No:2"–வில் 60' (18 m) அகல "B1B1" திட்டச்சாலை எனவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு திட்டங்களும் அனுமதி வழங்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்த நிலையில் உள்ளதால், திட்ட சாலையினை அமைக்க ஏதுவாக மேற்கண்ட இரண்டு திட்டங்களையும் "மறு ஆய்வு இணக்கம் (Review Consent) செய்து திருநெல்வேலி மாநகராட்சிக்கு வழங்குமாறு உறுப்பினர் செயலர் (பொ), உள்ளூர் திட்டக்குழுமம், திருநெல்வேலி அவர்களை கேட்டுக்கொள்ளலாம் மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 72

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் 10676/12/ஜிபி1)

---

6) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 26, பனிமலர் பார்க் நகர் குடியிருப்போர் நலச்சங்கம் சார்பாக மேற்குறிப்பிட்ட பகுதியில் புதிய தெருவிளக்கு அமைத்து தர கேட்கப்பட்டதின் மீது இடத்தினை நேராய்வு செய்யப்பட்டதில் இப்பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள இரண்டு மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து இரண்டு எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் செலவினம் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி பகிர்மான கழகத்திற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.20,000/–த்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 26, பனிமலர் பார்க் நகர் குடியிருப்பு பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள இரண்டு மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து இரண்டு எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் செலவினம் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி பகிர்மான கழகத்திற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.20,000/–த்திற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண் 73

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

7) jpUney;Ntyp khefuhl;rp Nkyg;ghisak; kz;ly mYtyfj;jpy; maw;gzp mbg;gilapy; 18.02.2016 Kjy; 28.02.2019 Kba cjtp Mizahsuhf gzpGhpe;J te;j jpUkjp. V.ftpjh.> Jiz Ml;rpaUf;F md;dhh; gzpahw;wpa fhyj;jpw;Fz;lhd tpLg;G+jpag; gq;Fj;njhif (Leave Salary Contribution) kw;Wk; Xa;T+jpag; gq;Fj;njhif (Pension Contribution) fPo;f;fz;lthW nrYj;j njhptpf;fg;gl;Ls;s khepy Kjd;ik fzf;fhah;> nrd;id-18 mth;fspd; fbjk; vz; AG/(A&E)PC-II/UnitIII/2016-17/ CRNo.162437/Vol.No.1335, ehs; 10.04.2017-y; gb Fwpg;gpl;L tug;ngw;w fPo;f;fz;;l tpgug;gbahd

**tpLg;g+jpa gq;Fj;njhif Leave Salary Contribution**

| Period | Rate/p.m. | | Months | Amount Rs. |
|---|---|---|---|---|
| 18.02.2016 Kjy; 28.02.2016 | Rs.6098/- | | 11 days | 2396.00 |
| 01.03.2016 Kjy; 30.06.2016 | Rs.6098/- | x | 4 months | 24392.00 |
| 01.07.2016 Kjy; 31.12.2016 | Rs.6288/- | x | 6 months | 37728.00 |
| 01.012017 Kjy; 31.03.2017 | Rs.6477/- | x | 3 months | 19431.00 |
| | | | nkhj;jk; | **&. 83947.00** |

**Xa;t+jpa gq;Fj;njhif Pension Contribution**

| Period | Rate/p.m. | | Months | Amount |
|---|---|---|---|---|
| 18.02.2016 Kjy; 28.02.2016 | Rs.7565/- | | 11 days | 2972.00 |
| 01.03.2016 Kjy; 31.03.2017 | Rs. 7565/- | x | 13months | 98345.00 |
| | | | nkhj;jk; | **&.101317.00** |

tpLg;G+jpag; gq;Fj;njhif &.83947/-k; (Leave Salary Contribution) kw;Wk; Xa;T+jpag; gq;Fj;njhif &.101317/-k; (Pension Contribution) Mfnkhj;jk; &.185264/-I khkd;wj; jPh;khdk; vz; 14> ehs; 26.04.2017y; khepy fzf;fhah; nrd;id mth;fSf;F nrYj;j mDkjpf;fg;gl;ljd;gb 02.06.2017y; tq;fp tiuNthiyahf mDg;gp itf;fg;gl;Ls;sJ. jw;NghJ khepy Kjd;ik fzf;fhah; nrd;id-18 mth;fspd; fbjk; vz; AG/(A&E)PC-II/UnitI/2018-19/CRNo164028/Vol.No.1351,ehs;; 05.08.19y; fPo;f;fz;lthW tpLg;G+jpag; gq;Fj;njhif> Xa;T+jpag; gq;Fj;njhif toq;fpl Nfl;L tug;ngw;w fbjk; khkd;wj;jpd; ghh;itf;Fk; mDkjpf;Fk; itf;fg;gLfpd;wJ.

**tpLg;G+jpa gq;Fj;njhif (Leave Salary Contribution) Final demand**

| Period | Rate per Month Rs. | Months | Amount Rs. |
|---|---|---|---|
| 18.02.2016 to 29.02.2016 | Rs.7150 | 12 days | 2959 |
| 01.03.2016 to 31.06.2016 | Rs.7150 | 4 Months | 28600 |
| 01.07.2016 to 31.12.2016 | Rs.7293 | 6 months | 43758 |
| 01.01.2017 to 31.06.2017 | Rs.7665 | 6 months | 45990 |
| 01.07.2017 to 31.12.2017 | Rs.7739 | 6 months | 46434 |
| 01.01.2018 to 31.06.2018 | Rs.8121 | 6 months | 48726 |

| | | | |
|---|---|---|---|
| 01.07.2018 to 31.12.2018 | Rs.8273 | 6 months | 49638 |
| 01.01.2019 to 28.02.2019 | Rs.8760 | 2 months | 17520 |
| | | **Total** | **Rs. 283625** |

**Xa;T+jpag; gq;Fj;njhif (Pension Contribution)**

| Period | Rate per Month Rs. | Months | Amount Rs. |
|---|---|---|---|
| 18.02.2016 to 29.02.2016 | Rs.30175 | 12 days | 12486 |
| 01.03.2016 to 31.05.2018 | Rs.30175 | 27 Months | 814725 |
| 01.06.2018 to 02.06.2018 | Rs.30175 | 2 days | 2012 |
| 03.06.2018 to 30.06.2018 | Rs.31950 | 28 days | 29820 |
| 01.07.2018 to 28.02.2019 | Rs.31950 | 8 months | 255600 |
| v | | **Total** | **Rs.1114643** |

d vdNt jpUney;Ntyp khefuhl;rp Nkyg;ghisak; kz;ly mYtyfj;jpy; maw;gzp mbg;gilapy; cjtp Mizahsh; Mf gzpGhpe;J 28.02.2019y; khWjyhfp nrd;w jpUkjp. m.ftpjh mth;fSf;F 18.02.2016 Kjy; 28.02.2019 Kba cs;s fhyj;jpw;F Vw;fdNt nrYj;jpa njhif Nghf kPjKs;s tpLg;G+jpa gq;Fj; njhif &.199678/-k; kw;Wk; Xa;T+jpa gq;Fj; njhif &.1013326/- Mf nkhj;jk; &.1213004/-I khepy Kjd;ik fzf;fhah;> nrd;id 18 mth;fSf;F nrYj;j khkd;wj;jpd; mDkjpf;F

mYtyff; Fwpg;G:

jpUney;Ntyp khefuhl;rpapy; Nkyg;ghisak; kz;ly mYtyfj;jpy; maw;gzp mbg;gilapy; 18.02.2016 Kjy; 28.02.2019 Kba cjtp Mizahsuhfg; gzpGhpe;J te;j jpUkjp. m.ftpjh Jiz Ml;rpaUf;F khepy Kjd;ik fzf;fhah; mth;fsJ fbjj;jpy; njhptpf;fg;gl;Ls;sgb 18.02.2016 Kjy; 28.02.2019 Kba cs;s fhyj;jpw;F Vw;fdNt nrYj;jpa njhif Nghf kPjKs;s tpLg;G+jpa gq;Fj; njhif &.199678/-k; kw;Wk; Xa;T+jpa gq;Fj; njhif &.1013326/- Mf nkhj;jk; &.1213004/- ia khepy Kjd;ik fzf;fhah; mth;fSf;F nrYj;j khkd;wk; mDkjpf;fyhk;.

தீர்மானம் எண் 74

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

e.f.vz; rp1/1328/2016

---

8) திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டு மாநகர பகுதிகளில் தண்ணீர் தேங்கும் இடங்களில் கொசுப்புழு உற்பத்தியினை தடுக்கும் பொருட்டும், விரைந்து நடவடிக்கை எடுத்து தீவிரமாக செயல்படுத்த ஏதுவாக 55 வார்டுகளுக்கும் தேவைக்கேற்ப நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 2571/2017/J1, நாள் 28.11.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ஒ.மு.எண் 13433/2018/ J1, நாள் 17.09.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள Plan 300HH-ன்படி மாநகராட்சியில் மொத்தம் உள்ள 155408 வீடுகளுக்கு நாளொன்றுக்கு ஒரு நபருககு 50 வீடுகள் வீதம் 6 நாட்களுக்கு 300 வீடுகள் என் விகிதத்தில் DBC களப்பணியாளர்கள் மாநகர பகுதிகளில் ஜூலை 2019 வரை பணியாற்றி வருகின்றனர். தற்பொழுது மீண்டும் பருவமழை காலம் துவங்க இருப்பதால், ஏற்கனவே பணியாற்றிய 517 களப்பணியாளர்கள் மாநகர பகுதிகளில் உள்ள

வீடுகளில் மட்டுமே டெங்கு கொசுப்புழு ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் தற்போது மாநகர பகுதிகளில் 12500 வணிக வளாகங்கள் உள்ளது. அவ்வணிக வளாகங்களிலும் டெங்கு கொசுப்புழு உற்பத்தியினை கண்டறிந்து நோய் பரவுவதை தடுக்கும் பொருட்டு மேற்படி 517 களப்பணியாளர்களுடன் சேர்ந்து மேலும் 43 களப்பணியாளர்கள் அதிகபடியாக தேவைப்படுவதால் அப்பணியாளர்களை பணியமர்த்துவதற்கு தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலகக் குறிப்பு

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 2571/2017/J1, நாள் 28.11.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ஒ.மு.எண் 13433/2018/ J 1, நாள் 17.09.2018–ன்படியும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடத்தப்பட்டு வரும் வாராந்திர டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை ஆய்வு கூட்டத்தில் திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் தேவையான களப்பணியாளர்களை நியமித்து டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை தொய்வு இல்லாமல் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையிலும், திருநெல்வேலி மாநகராட்சியில் 517 DBC பணியாளர்களை நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.359/– வீதம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தற்போது நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி ஊதியத்தின் அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர்.

மேலும் 517 DBC பணியாளர்களை சேர்த்து மேலும் 43 களப்பணியாளர்கள் அதிகப்படியாக தேவைப்படுவதால் அப்பணியாளர்களை பணியமர்த்துவதற்கும், தொடர்து பணியில் ஈடுபடுத்தவும் அதற்கான ஊதிய செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 75

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(எச்2/3092/2014)

---

9) திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண் 5–க்குட்பட்ட ஸ்ரீபுரம் பகுதியில் அமைந்துள்ள பழைய நகராட்சி ஆரம்பப்பள்ளி கட்டிடத்தை தமிழ்நாடு மாநகராட்சி மற்றும் நகராட்சி ஓய்வூதியர்கள் சங்கத்தினரால் திருநெல்வேலி மாநகராட்சி பகுதி (கிளை) அவர்களின் சங்க பயன்பாட்டிற்காக ஒதுக்கித் தருமாறு கோரிய 23.08.2017–ம் தேதிய விண்ணபத்தின் அடிப்படையில், மேற்கண்ட பள்ளி கட்டிடத்தினை ஓய்வூதிய சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்வது தொடர்பாக நான்கு மண்டல உதவி ஆணையர்கள், உதவி செயற் பொறியர்கள் மற்றும் கணக்கு அலுவலர் கொண்ட குழு இவ்வலுவலக செயல்முறை ஆணை இ1/4734/2017, நாள் 23.07.2018–ன்படி அமைக்கப்பட்டு மேற்படி குழு அலுவலர்களால் கட்டிடத்தினை ஆய்வு செய்து ஓய்வூதியர்கள் சங்கத்திற்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதின் பேரில், திருநெல்வேலி மாநகராட்சி கூட்டத்தீர்மானம் எண் 189, நாள் 27.02.2019–ல் அனுமதி வழங்கயுள்ளதின்படி இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண் இ1/4734/2017, நாள் 07.03.2019–ன்படி மேற்படி கட்டிடத்தினை ஓய்வூதிய சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

மேற்படி இடம் நேராய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட பழைய கட்டிடம் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதாலும், மேலும் மேற்படி இடம் 33.00 மீட்டர் நீளமும், 10.20 மீட்டர் அகலமும் கொண்ட மொத்தம் 330.60 சதுரமீட்டர் பரப்பளவில் உள்ள இடமாக உள்ளதாலும், மேற்படி இடத்தினை ஓய்வூதியர்கள் சங்கத்திற்கு ஒப்படைப்பு செய்வது குறித்து தச்சை மண்டல உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி ஆணையாளர் ஆகியோர்கள் மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் கலந்தாய்வு செய்யப்பட்டதில், இனிவரும் நாட்கள் இந்த மாமன்ற தீர்மானத்தை காரணம் காட்டி வேறு நபர்களும் மாநகர கட்டிடத்தை கேட்க வாய்ப்புள்ளதாலும், மேலும் பழைய நகராட்சி துவக்கப்பள்ளி இருந்த இடத்தில் அப்பகுதி பொது

மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளுக்கு தேவையான கட்டமைப்பு செய்து கொடுக்க வேண்டும் என்பதாலும், 27.02.2019–ம் தேதிய மாமன்றத் தீர்மானம் எண் 189–னை இரத்து செய்ய மாமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண் 5–க்குட்பட்ட ஸ்ரீபுரம் பகுதியில் அமைந்துள்ள பழைய நகராட்சி ஆரம்பப்பள்ளி கட்டிடத்தை குழு அலுவலர்களின் பரிந்துரையின் அடிப்படையில் மாநகராட்சி ஓய்வூதியர்கள் சங்க பயன்பாட்டிற்காக மாமன்றத தீர்மானம் எண் 189, நாள் 27.02.2019–ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் 336.60 சதுரமீட்டர் பரப்பளவில் உள்ளதால் இனிவரும் நாட்களில் இந்த மாமன்ற தீர்மானத்தை காரணம் காட்டி வேறு நபர்களும் மாநகர கட்டிடத்தை கேட்க வாய்ப்புள்ளதாலும், பழைய நகராட்சி துவக்கப்பள்ளி இருந்த இடத்தில் அப்பகுதி பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளுக்கு தேவையான கட்டமைப்பு ஏற்படுத்தவோ அல்லது அங்கன்வாடி மையம் அமைக்கவோ பயன்படுத்தலாம் என்பதனைக் கருதி மாமன்றத் தீர்மானம் எண் 189, நாள் 27.02.2019–னை இரத்து செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 76

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ1/4734/22017–தச்சநல்லூர் மண்டலம்)

---

10) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தத்தாரரால் முன்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்தத்தாரர் திரு.ஐ.கணபதி என்பவரால் 06.03.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | EMD (Rs.) | Register Details |
|---|---|---|---|
| 1 | Construction of Storm Water Drain and culvert at Melanatham W.No.38 | 19,900 | MPM/2013-14/ P.No.9 |
| 2 | Providing CC paement at Karuppanthurai W.No.38 | 22,400 | MPM/2014-15/P.No.15 |
| 3 | Construction of FOL New Bus Stand near platform No.4 W.No.33 | 20,500 | MPM/2014-15/P.No.32 |
| 4 | Construction of FOL at New Bus Stand near Platform 1 W.No.28 | 20,500 | MPM/2015-16/P.No.32 |
| | Total | 83,300 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள முன்வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/–க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)–ன்படி மேற்படி முன்வைப்புத் தொகை ரூ.83,300/– மட்டும் ஒப்பந்தத்தாரர் திரு.ஐ.கணபதி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 77

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

**11)** திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தத்தாரரால் முன்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு ஒப்பந்ததாரர் திரு.ஐ.கணபதி அவர்களால் 07.03.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| SlNo | Name of work | EMD (Rs.) | Palay Deposit Register |
|---|---|---|---|
| 1 | ராஜேந்திர நகர் 5, 6வது தெருக்களில் ஓடை மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 19,600 | 2012–13 பக்கம் 22 |
| 2 | | 19,600 | 2012–13 பக்கம் 23 |
| 3 | கணபதியாபுரம் பொட்டல் (ம) திம்மராஜபுரம் போஸ்ட் ஆபீஸ் தெருவில் ஓடை மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் | 15,600 | 2013–14 பக்கம் 3 |
| 4 | | 15,600 | 2013–14 பக்கம் 4 |
| 5 | பாளை பேருந்து நலையத்தில் கழிப்பிடம் கட்டுதல் | 25,750 | 2013–14 பக்கம் 16 |
| 6 | | 25,750 | 2013–14 பக்கம் 16 |
| 7 | கக்கன் நகர் பகுதியில் வடிகால் அமைத்தல் | 10,000 | 2013–14 பக்கம் 20 |
| 8 | | 10,000 | 2013–14 பக்கம் 19 |
| | மொத்தம் | 1,41,900 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள முன்வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/–க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)–ன்படி முன்வைப்புத் தொகை ரூ.1,41,900/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.ஐ.கணபதி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 78

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

**12)** திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் முன்வைப்புத் தொகை (ம) பின்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.ஐ.கணபதி அவர்களால் 07.03.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது,

| Sl. No | Name of work | EMD (Rs.) | Palay Deposit Register |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 18 சீனிவாச நகரில் கழிவு நீரோடை அமைத்தல் | 13,648 | Main Office 12-13 P.No.27 |
| 2 | | 25,000 | Palay Dep. Reg. 2013-14 P.No.3 |
| | Total | 38,648 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள முன்வைப்புத் தொகை (ம) பின்வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/–க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)–ன்படி முன்வைப்புத் தொகை ரூ.38,648/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.ஐ.கணபதி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 79

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

13) திருநெல்வேலி மாநகராட்சி, மைய அலுவலகம் மற்றும் நான்கு மண்டல அலுவலகங்கள், மாண்புமிகு மேயர், பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானம் மற்றும் மரியாதைக்குரிய துணை மேயர், ஆணையாளர் ஆகியோர்களின் குடியிருப்புகளில் முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடிதம் (டெக்ஸ்கோ) மூலம் 18 பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் முன்னாள் இராணுவத்தினர் கழகம் மூலம் நியமிக்கப்பட்டு ஒப்பந்த பணியாளர்கள் பேருந்து நிலைய பாதுகாப்பு பணி, கடை வாடகை வசூல் செய்யும் பணி, பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணி, பேருந்து நிலையத்தில் வாகன காப்பகத்தில் வசூல் செய்யும் பணிக்கு 25 டெக்ஸ்கோ பாதுகாப்பு பணியாளர்களும் மாமன்றத் தீர்மானம் எண் 6, நாள் 07.06.2019–ன்படி 01.04.2019 முதல் 31.03.2020 முடியவுள்ள காலத்திற்கு முன்னாள் இராணுவத்தினர் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு பணியாளர்கள் (Security Guard) 39 நபர்களையும் பணியாற்ற அனுமதித்தும் மாத ஊதியம் ரூ.16189/– , தலைமை காவலர் 1 மற்றும் இளநிலை உதவியாளர் நிலையில் முன்னாள் இராணுவத்தினர் 3 நபர்களை பணியாற்ற அனுமதித்தும் மாத ஊதியம் ரூ.18955/– மற்றும் 12% சேவை கட்டணமும், 18% சேவை வரி (CGST 9% + SGST 9%) எனும் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு மேற்கண்ட 43 பணியாளர்களுக்கான ஊதிய செலவுகளுக்கும் மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் திருநெல்வேலி மாநகராட்சிக்கு கூடுதலாக டெக்ஸ்கோ பாதுகாவலர் (Texco Securitys) 15 நபர்களை உடன் நியமிக்குமாறு உதவி மேலாளர், தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் கழகம், திருநெல்வேலிக்கு கடிதம் அனுப்பப்பட்டது. டெக்ஸ்கோ பொது மேலாளர், சென்னை கடிதம் எண் TEXCO/TMC Tvli/A11/2019, நாள் 22.08.2019–ம் தேதிய கடிதத்தில் 15 டெக்ஸ்கோ பாதுகாவர்களுக்கு ரூ.16639/– வீதம் ரூ.249585/– சேவை கட்டணம் 12 சதவிகிதம் மற்றும் GST 18 சதவிகிதம் சேர்த்து மாத ஊதியம் ரூ.329852/– எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விபரப்படி கூடுதலாக 15 டெக்ஸ்கோ பாதுகாவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் 31.03.2020 முடியவுள்ள காலத்திற்கு நியமிக்கவும், அதற்காகும் மாத செலவினத் தொகை ரூ.329852/–க்கும், அவ்வப்போது உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் மற்றும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்பு கழகத்தின் மூலம் பணிபுரிந்து வரும் 15 டெக்ஸ்கோ பணியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற அனுமதிக்கவும், அதற்கான மாத செலவினத் தொகை ரூ.329852/– மற்றும் அவ்வப்போது உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் மற்றும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இச்செலவினங்களுக்கு 2019–2020 வரவு செலவு திட்டத்தின் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 80

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(சி3/8109/2018)

---

14) திருநெல்வேலி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர்.எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்திற்கு எதிரில் பெருமாள்புரம் பகுதியில் சிறைத்துறைக்கு சொந்தமான இடத்தில் ஆம்னி பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாமன்றத் தீர்மானம் எண் 15, நாள் 01.07.2019–ன்படி மேற்கண்ட ஆம்னி பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும்

பேருந்துகளுக்கு வாகனம் ஒன்றுக்கு 24 மணி நேரத்திற்கு ரூ.200/– என கட்டணம் நிர்ணயம் செய்து அனுமதியளித்துள்ளது. மேற்கண்டவாறு கட்டணம் வசூல் செய்யும் பணிக்கு முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்புக் கழகம் (TEXCO) மூலம் 3 பாதுகாவலர்களினை பணியமர்த்தி கொள்ள 13.06.2019–ல் ஆணையர் மற்றும் தனிஅலுவலரின் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஆம்னி பேருந்தின் செயல்பாட்டின் முக்கியத்துவம் கருதி முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்புக் கழகம் (TEXCO) மூலம் 31.07.2019 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு பணியாளர் 3 நபர்களினையும் பணியாற்ற அனுமதித்தும், மாத ஊதியமாக ரூ.16,171/– மற்றும் 12% சேவைக் கட்டணம் 18% சேவை வரி எனும் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு மேற்கண்ட 3 பாதுகாவலர்களுக்கான ஊதிய செலவுகளுக்கும் மாமன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பொருளில் காணும் விபரப்படி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர்.எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்திற்கு எதிரில் பெருமாள்புரம் பகுதியில் சிறைத்துறைக்கு சொந்தமான இடத்தில் செயல்பட்டு வரும் ஆம்னி பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் பணிக்கு முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்புக் கழகம் (TEXCO) மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 பாதுகாவலர்களை 01.08.2019 முதல் 31.07.2019 வரையிலான காலத்திற்கு பணியாற்றவும், அவர்களுக்கான மாத ஊதியமாக ரூ.16,171/– மற்றும் 12% சேவைக் கட்டணம் 18% சேவை வரி எனும் அடிப்படையில் அவ்வப்போது உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் ஆகிய கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் அப்பணியின் அத்தியாவசிய அவசரம் கருதி 13.06.2019 அன்று ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்ற நிலையில் 03.08.2019 முதல் 3 பாதுகாவலர்கள் பணிபுரிய அனுமதித்தற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 81

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(அ1/10434/2018–மே.பா.)

---

15) அரசாணை எண் 240, நிதி (ஊதியம்) துறை, நாள் 02.08.2019–ல் தமிழக அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2019–2020ஆம் ஆண்டுக்கான பண்டிகைக்கால முன்பணம் ரூ.5000/–லிருந்து ரூ.10000/– வழங்க பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட அரசாணையை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 82

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் சி3/3393/2019)

---

16) இம்மாநகராட்சிப் பகுதியில் உள்ள 40 சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 645 நபர்களை 05.10.2018 முதல் 88 நாட்கள் திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத் தீர்மானம் எண் 112, நாள் 29.10.2018–ல் அனுமதி

வழங்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 4 வார்டு அலுவலகங்கள் மற்றும் சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் மேற்படி பணியாளர்கள் துப்புரவுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மேற்படி சுய உதவிக்குழுக்களின் அனுமதி காலம் 27.09.2019 உடன் முடிவடைகின்றது.

எனவே கீழ்க்கண்ட விபரப்படி 40 சுய உதவிகுழுக்கள் மூலம் உள்ள கீழ்க்கண்ட 645 நபர்களை 30.09.2019 முதல் 88 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரியவும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர் களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் மற்றும் வார்டு |
|---|---|---|---|
| 1 | அக்னி சிறகுகள் சுகாதாரப் பணிக்குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 2 | அக்னி பறவைகள் சுகாதாரப் பணிக்குழு | 23 | திருநெல்வேலி வார்டு |
| 3 | தாமிரபரணி சுகாதாரப் பணிக்குழு | 20 | திருநெல்வேலி வார்டு |
| 4 | அருந்ததியர் சுகாதாரக் குழு | 25 | திருநெல்வேலி வார்டு |
| 5 | சாரா சுகாதார சுய உதவிக் குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 6 | வெண்ணிலா சுகாதாரப் பணிக்குழு | 23 | தச்சநல்லூர் மண்டலம் |
| 7 | பசுமை சுகாதாரப் பணிக்குழு | 12 | தச்சநல்லூர் மண்டலம் |
| 8 | ஸ்ரீ ஜெயம் சுகாதாரப் பணிக்குழு | 15 | தச்சநல்லூர் மண்டலம் |
| 9 | காந்திஜி சுகாதாரப் பணிக்குழு | 11 | தச்சநல்லூர் மண்டலம் |
| 10 | ஸ்ரீ பேராட்சி அம்மன் ஆண்கள் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 11 | ஸ்ரீ உலகம்மன் சுகாதாரப் பணிக்குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 12 | ஸ்ரீ முத்தாரம்மன் ஆண்கள் பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 13 | வடக்கத்தி மாரியம்மன் சுகாதாரக் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 14 | APJ அப்துல் கலாம் ஆண்கள் குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 15 | ஸ்ரீ செல்வ விநாயகர் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 16 | ஸ்ரீ காளியம்மன் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 17 | தந்தை பெரியார் சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 18 | ஆதி சக்தி சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 19 | அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக்குழு | 18 | பாளை மண்டலம் |
| 20 | டாக்டர் அம்பேத்கார் ஆண்கள் குழு | 23 | பாளை மண்டலம் |
| 21 | தளபதி ஒண்டிவீரன் சுயஉதவிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 22 | மகாராஜா ஆண்கள் சுயஉதவிக்குழு | 15 | பாளை மண்டலம் |
| 23 | ஓம்சக்தி சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 24 | முத்தாரம்மன் சுயஉதவிக்குழு | 10 | பாளை மண்டலம் |
| 25 | ஸ்ரீ அன்னை தெரசா சுயஉதவிக்குழு | 14 | பாளை மண்டலம் |
| 26 | நேருஜி ஆண்கள் சுகாதாரக் குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 27 | மங்களஈஸ்வரி பெண்கள் சுயஉதவிக்குழு | 21 | மேலப்பாளையம் மண்டலம் |
| 28 | பாரதி ஆண்கள் சுயஉதவிக்குழு | 19 | மேலப்பாளையம் மண்டலம் |
| 29 | செங்கை வாஞ்சிநாதன் சுகாதாரக் குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 30 | மங்கள விநாயகர் ஆண்கள் சுய உதவிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 31 | செந்தமிழ் மகளிர் சுயஉதவிக்குழு | 10 | மேலப்பாளையம் மண்டலம் |
| 32 | சுபாஷ் சந்திரபோஸ் சுகாதாரப் பணிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 33 | நேதாஜி சுய உதவிக்குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| 34 | செம்மொழி சுயஉதவிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 35 | அன்னை சத்தியா சுயஉதவிக்குழு | 15 | மேலப்பாளையம் மண்டலம் |
| 36 | அன்னை சந்தியா சுயஉதவிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 37 | திருப்பதி சுகாதாரக்குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 38 | காளியம்மன் ஆண்கள் சுகாதாரப் பணிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 39 | தந்தை பெரியார் ஆண்கள் பணிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 40 | TMC 40 சுகாதார சிறப்பு பணிக்குழு | 12 | ராமயன்பட்டி உரக்கிடங்கு தச்சநல்லூர் மண்டலம் |
| | மொத்தம் | 645 | |

அலுவலகக் குறிப்பு:

அ) உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000–ஐப் பின்பற்றி குப்பையினை வீடுவீடாகச் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பையாகப் பிரித்து வாங்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். இம்மாநகராட்சியிலுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநகரப் பகுதி முழுவதிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் இக்குழுக்களைச் சேர்ந்த நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.339/–என்ற அடிப்படையில் தொகை வழங்குவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் வெகுவாக குறைகின்றது. மேலும் அரசாணை எண் 69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.3) துறை, நாள் 04.05.98ன் மூலம் தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார் மயமாக்குதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில், தனியார்மயமாக்கப்பட வேண்டிய சேவைப்பணிகளுள் திடக்கழிவு மேலாண்மையும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,25,00,000/– ஆகும். சுய உதவிக் குழுக்களை பணியில் ஈடுபடுத்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.65,59,650/– ஆகும். மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட 40 சுய உதவிக் குழுக்களை (645 நபர்கள்) நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.339/– மாவட்ட ஆட்சித்தலைவரின் செ.மு.ஆணை ந.க.எண் M3/16361/2019, நாள் 02.07.2017–ன்படி தினஊதியம் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண் 22, நாள் 30.07.2019–ன்படி அனுமதி காலம் 02.07.2019 முதல் 27.09.2019 முடிய 88 நாட்கள் முடிவடைந்த நிலையில், மேலும் 30.09.2019 முதல் 88 நாட்களுக்கு மேற்படி சுயஉதவிக்குழு பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும் அதற்காகும் மொத்த செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தியமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 83

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**(எச்2/7560/98–மை.அ)**

---

17) திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் 8 குடியிருப்போர் நலச்சங்கமும், பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும் மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நல சங்கங்களிலும் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலசங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்பரவு பணிகள் மேற்கொள்ளபட்டு வந்தது. தற்போது மேற்படி நல சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 01.01.2018 முதல் ரத்து செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ப்பட்டு வருகின்றது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை

கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்ப்ட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின்படி சுய உதவிக்குழு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக தச்சநல்லூர் மண்டலத்திற்கு 19 நபர்கள் கொண்ட ஒரு சுய உதவிக்குழுவும், பாளையங்கோட்டை மண்டலத்திற்கு 15 நபர்கள் கொண்ட இரண்டு சுய உதவிக்கு குழுவும், மேலப்பாளையம் மண்டலத்திற்கு 17 நபர்கள் மற்றும் 16 நபர்கள் கொண்ட இரண்டு சுயஉதவிக்குழுவும் ஏற்படுத்தி மேற்படி பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற தீர்மான எண் 13, நாள் 28.03.2018–ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி மேற்படி சுயஉதவிக்குழுக்கள் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்கள் பணிக்காலம் மாமன்ற தீர்மானம் எண் 34, நாள் 30.07.2019–ன் பிரகாரம் 21.09.2019 உடன் முடிவடைவதால் மேலும் 24.09.2019 முதல் 88 நாட்களுக்கு மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் 8 குடியிருப்போர் நலசங்கமும் பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும் மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நல சங்கங்களிலும் மொத்தம் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலசங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்பரவு பணிகள் மேற்கொள்ளபட்டு வந்தது. தற்போது மேற்படி நலச்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 01.01.2018 முதல் ரத்து செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்திற் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின் படி சுய உதவிக்குழு பணியாளர்களைக் கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக தச்சநல்லூர் மண்டலத்திற்கு 19 நபர்கள் கொண்ட ஒரு சுயஉதவிக்குழுவும், பாளை மண்டலத்திற்கு 15 நபர்கள் கொண்ட இரண்டு சுய உதவிக்குழுவும், மேலப்பாளையம் மண்டலத்திற்கு 17 நபர்கள் மற்றும் 16 நபர்கள் கொண்ட இரண்டு சுய உதவிக்குழுவும் ஏற்படுத்தி மேற்படி பணியாளர்கள் மூலம் துப்புரவு பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கு மாமன்ற தீர்மான எண் 13, நாள் 28.03.2018 ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி மேற்படி சுயஉதவிக்குழுக்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்கள் பணிக்காலம் மாமன்ற தீர்மானம் எண் 34, நாள் 30.07.2019 ன் பிரகாரம் 26.06.2019 முதல் 21.09.2019 உடன் முடிவடைவதால் மேலும் 24.09.2019 முதல் 88 நாட்களுக்கு மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி அதற்கான செலவினத்திற்கும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளுமாறு மாமன்ற அனுமதி வழங்கலாம். மேலும் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தியமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 84

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(எச்2/96/2018)

---

18) அரசாணை (நிலை) எண். 172, வருவாய் (நநி.5(2) துறை, நாள் 28.03.2000 இன் படியும், அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடித எண் 9395/நநி4/2000–1, நாள் 27.4.2000–இன்படியும், திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் உள்ள தொலை தொடர்பு நிறுவனங்கள் கண்ணாடி இழைகளை பூமிக்கு அடியில் பயன்படுத்தும் அனைத்து தனியார், அரசு

மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து தடவாடகை வசூல் செய்யப்பட்டு வருகின்றது.

மாமன்றத் தீர்மான எண் 22, நாள் 28.05.2015–இன்படி, இம்மாநகராட்சி பகுதியில் தடவாடகையாக ஆண்டொண்டிற்கு, ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.12700/–என 01.4.2015 முதல் 31.03.2018 முடிய உள்ள காலங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டு அதன்படி வசூல் செய்யப்பட்டு வருகின்றது.

அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடித எண் 9395/நநி4/ 2000–1, நாள் 27.4.2000–இன் படி, மேற்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்ட தடவாடகையானது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

எனவே அதன்படி 01.04.2018 முதல் 31.03.2021 முடிய உள்ள காலங்களுக்கு தடவாடகையினை தற்பொழுது வசூல் செய்யப்பட்டு வரும் தொகை ரூ.12700/–இல் இருந்து 15% உயர்வு செய்து ரூ.14605/–என நிர்ணயம் செய்ய மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் உள்ள தொலை தொடர்பு நிறுவனங்கள், கண்ணாடி இழைகளை (OFC)) பூமிக்கு அடியில் பயன்படுத்தும் அனைத்து தனியார் (ஏர்செல், ரிலையன்ஸ் போன்ற இன்னும் பல தொலை தொடர்பு நிறுவனங்கள்) அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களிடமிருந்து தடவாடகையாக ஆண்டொன்றிற்கு, ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு, 31.03.2018–இல் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.12700/–இல் 15% உயர்வு செய்து 01.4.2018முதல் 31.03.2021 முடிய உள்ள காலங்களுக்கு ரூ.14605/– (ஆண்டொன்றிற்கு, ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு) என நிர்ணயம் செய்து வசூலிக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 85

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

19) அரசாணை எண் 241 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் 02.08.2019–ல் தமிழக அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு 2019–2020–ம் ஆண்டுக்கான பண்டிகை முன்பணம் ரூ.2000/–லிருநது ரூ.4000/–உயர்த்தி பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட அரசாணையை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 86

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(சி3/7050/2019)

---

20) திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 5 மாநகராட்சி பொருட்காட்சி திடலில் மத்திய அரசின் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ரூ.56.71 கோடி மதிப்பீட்டில் (Trade Centre) வணிக வளாகம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பணி துவங்கப்படவுள்ளது. மேற்படி பணி தொடங்கப்படும் பொருட்காட்சி திடல் முன்பகுதியில் உள்ள மாநகராட்சி வணிக வளாகம் (Commercial Complex) 73.00 மீட்டர் நீளத்திலும், 10.00 மீட்டர் அகலத்திலும் அமைந்துள்ளது. மேற்படி கட்டிடம் சுமார் 30 வருடம் பழமைவாய்ந்த கட்டிடமாகும். மேற்படி கட்டிடமானது ஆங்காங்கு சேதமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. மேற்கண்ட கட்டிடத்தின்

தரைத்தளத்தில் 16 கடைகளும், முதல் தளத்தில் 3 அலுவலகங்களும் (நிலஅளவை அலுவலகம், உள்ளாட்சி நிதி தணிக்கை துணை இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதி தணிக்கை மண்டல இணை இயக்குநர் அலுவலகம்) அமைந்துள்ளன. மேற்படி வணிக வளாக கட்டிடம், புதிதாக கட்டப்படவிருக்கும் வணிக வளாகத்தினை (Trade Centre) மறைக்கும் வண்ணமும், அதன் முன்முகப்பு தோற்றம் வெளியில் தெரியாத அளவிலும் இடையூறாக உள்ளது. எனவே மேற்படி பழைய வணிக கட்டிடத்தினை முற்றிலும் இடித்து அப்புறப்படுத்திட மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண் 5, மாநகராட்சி பொருட்காட்சி திடலில் மத்திய அரசின் சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தின் கீழ் வணிக வளாகம் (Trade Centre) துவங்கப்படவுள்ளது. மேற்படி பணி தொடங்கப்படும் பொருட்காட்சி திடல் முன்பகுதியில், 73.00 மீட்டர் நீளத்திலும், 10.00 மீட்டர் அகலத்திலும் அமைந்துள்ள பழைய மாநகராட்சி வணிக வளாகம் கட்டப்பட்டு சுமார் 30 வருட பழமை வாய்ந்த பழுதடைந்த நிலையில், மேலும் மேற்படி கட்டிடம் தற்போது அமையவிருக்கும் வணிக வளாகத்தின் (Trade Centre) முன்முகப்பு தோற்றம் வெளியே தெரியாத வகையில் இடையூறாக உள்ளபடியால், மேற்படி கட்டிடத்தினை முற்றிலும் இடித்து அப்புறப்படுத்திட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 87

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ1/1682/18–தச்சை)

---

21) அ) திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டல அலுவலகம், வார்டு எண் 24, கதவு எண் 16, எல்லையம்மன் கோவில் தெருவிற்குரிய வரிவிதிப்பு எண் (வரிவிதிப்புதாரர் பெயர் R.சங்கரலிங்கம்) 146/55204–க்குரிய சொத்துவரி நிலுவை தொகை 2018–2019 முதல் அரையாண்டு முதல் 2019–2020 (31.03.2020) இரண்டாம் அரையாண்டு முடிய உள்ள சொத்துவரி நிலுவை தொகை ரூ.816/– மற்றும் மேற்படி வரிவிதிப்பு எண் 146.55204–க்குரிய (SUC) திடக்கழிவு பயன்பாட்டுக் கட்டணம் 2019–2020 முதல் மற்றும் இரண்டாம் அரையாடுக்கு தொகை ரூ.360/–

ஆ) திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம் அலுவலகம், வார்டு எண் 24, கதவு எண் 16/1 எல்லையம்மன் கோவில் தெருவிற்குரிய வரிவிதிப்பு எண் (வரிவிதிப்புதாரர் பெயர் R.சங்கரலிங்கம்) 146/56803–க்குரிய சொத்துவரி நிலுவை தொகை 2019–2020 முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டுக்குரிய சொத்துவரி தொகை ரூ.816/– மற்றும் மேற்படி வரிவிதிப்பு எண் 146/56803–க்குரிய (SUC) திடக்கழிவு பயன்பாட்டுக் கட்டணம் 2019–2020 முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டுக்கு தொகை ரூ.360/– மேற்படி அ, ஆ குறிப்பில் தெரிவித்துள்ள விபரப்படி கணனியில் சொத்துவரி தொகை மற்றும் திடக்கழிவு பயன்பாட்டுக் கட்டணம் நிலுவையில் உள்ளது.

மனுதாரர் திரு.R.சங்கரலிங்கம் மனு நாள் 26.04.2019–ல் தான் புதியதாக வீடு கட்டியுள்ளதாகவும், பழைய வரிவிதிப்பு எண்ணுக்கு ரத்து செய்யாமல் கணினியில் நிலுவை இருந்து வருவதால் சொத்துவரி இரசதீனை இரத்து செய்ய மனு கொடுத்துள்ளார்.

மனுதாரர் திரு.R.சங்கரலிங்கம் க.வி.எண் TP2/237/2016–ன்படி பழைய கட்டிடத்தை இடித்து புதியதாக கட்டிடம் கட்டி உள்ளதால் பழைய வரிவிதிபபு எண்களுக்குரிய சொத்துவரி நிலுவைத் தொகை வரிவிதிப்பு எண் 146/55204–க்கு சொத்துவரி 816+SUC–360=1176/–னை மற்றும் வரிவிதிப்பு எண் 146/56803–க்கு சொத்துவரி 816+SUC–360=1176/–னை வஜா செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பாளை மண்டல அலுவலக வருவாய் உதவியாளர், உதவி வருவாய் அலுவலர் அவர்கள் குறிப்பின் அடிப்படையில் பாளை மண்டல அலுவலக வார்டு எண் 24, கதவு எண் 16, 16/1 எல்லையம்மன் கோவில் தெருவில் உள்ள வரிவிதிப்புதாரர் திரு.R.சங்கரலிங்கம் பெயரில் நிலுவையில் உள்ள சொத்துவரிவிதிப்பு எண் 146/55204–க்கு 816+SUC–360=1176/–சொத்துவரி மற்றும் வரிவிதிப்பு எண் 146/56803–க்கு சொத்துவரி 816+SUC–360=1176/–னை வஜா செய்ய மாமன்றம் தீர்மானிக்கலாம்.

தீர்மானம் எண் 88

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் A8/1913/2019–பாளை)

---

22) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டல அலுவலகம், வார்டு எண் 48, பேட்டை ரயில் நகர் பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க மேற்படி பகுதி பொதுமக்கள் கேட்டுக்கொண்டதன்படி, மேற்படி பகுதியில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு மின்பாதை அமைத்து 20 W LED தெருவிளக்குகள் 3 எண்ணங்கள் அமைக்கவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.50000/–க்கு மாமன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ள திருநெல்வேலி மண்டல அலுவலகம், வார்டு எண் 48, பேட்டை ரயில் நகர் பகுதியின் பொது மக்கள் நலன் கருதி மேற்படி பகுதிக்கு 20 W LED தெருவிளக்குகள் 3 எண்ணங்கள் அமைக்கவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.50000/–க்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 89

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---